**SC.No.119/2025**
**PW1 : கணபதி**
**தேதி : 10.02.2026**

**Crl.M.P.No.116/2026 என்ற மனுவில் 05.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் மாலை 3.30 – 4.00 மணி இருக்கும். புகார் கொடுக்கும்போது நான் சம்பவத்தில் பயன்படுத்திய கல்லை காவல்நிலையத்திற்கு எடுத்துச்செல்லவில்லை. கண்ணாடி கல் எரிந்ததால் கண்ணாடி முழுவதும் விரிசல் ஏற்பட்டது. கண்ணாடி விரிசல் ஏறப்பட்டாலே உடைந்தது என்று தான் கூறுவோம். கண்ணாடி துண்டு துண்டாக விழவில்லை. பயணிகளை குறித்த நேரத்தில் கோயமுத்தூரில் கண்ணாடி உடைந்ததால் கொண்டு சேர்க்க இயலவில்லை. காவல்நிலையத்தில் பேருந்தை நிறுத்திய பிறகு மறுநாள் மதியம் காவல்நிலையத்திலிருந்து பேருந்தை எடுத்தோம். பேருந்து கண்ணாடி உடைந்ததற்கு துறை ரீதியாக நமுனா எனக்கு அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எனக்கு அவ்வாறு நமுனா வரவில்லை. பேருந்தில் வந்தவர்கள் யார் யார் என்று காவல்நிலையத்தில் நான் கூறவில்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்போது நான், நடத்துனர், மற்றும் ஒருவர் வந்தார். புகாரில் காவல்நிலையத்திற்கு யார் யார் வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரி கல்லை பேருந்தில் எரிந்து உடைக்க வில்லை என்றும் புகாரை சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும் உங்களுடன் மற்றொரு நபர் வந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால்

சரியல்ல. நீங்கள் சொல்வது போல் பேருந்தின் கண்ணாடி உடையவில்லை என்றும் எதிரி எந்த குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பேருந்து நிலையம் செல்வதற்காக தங்கள் வண்டியில் ஏறினார் என்றும் அதற்கு நீங்கள் தொலைதூரம் செல்லும் பேருந்தில் உள்ளூர் பயணிகளை ஏற்ற முடியாது என்று ஆஜர் எதிரியை இறக்கிவிட்டீர்கள் என்றும் அதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் கீழே தள்ளிவிட்டீர்கள் என்றும் அதற்காக ஆஜர் எதிரி உங்கள் மீது புகார் கொடுக்க முற்பட்டார் என்றும் அதற்காக நீங்கள் அரசு ஊழியர் என்பதால் முந்திக்கொண்டு எதிரி மீது பொய்யாக பொய்புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.10 17:20:51 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**SC.No.119/2025**
**PW2 : வெங்கடேசன்**
**தேதி : 10.02.2026**

**Crl.M.P.No.116/2026 என்ற மனுவில் 05.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பேருந்து சம்பவ சமயத்தில் புதுக்கோட்டையிலிருந்து கோயமூத்தூர் நோக்கி சென்றோம். சம்பவ நடந்தபோது கோயமுத்தூருக்கு செல்லவில்லை. பேருந்தை பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு சென்றது. பேருந்தை காவல்நிலையத்திலிருந்து அடுத்தநாள் எடுத்துச்சென்றோம். நான் சம்பவத்தில் பயன்படுத்திய கல்லை எடுத்துச்சென்று ஒப்படைக்கவில்லை ஆஜர் எதிரியை தான் கூட்டிச்சென்றோம். சம்பவ இடத்தின் அருகில் பேருந்து நிறுத்ததிற்கு இடது பக்கம் கடைகள் இல்லை. நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரி கல்லை பேருந்தில் எரிந்து உடைக்க வில்லை என்றும் புகாரை சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் பேருந்தின் கண்ணாடி உடையவில்லை என்றும் எதிரி எந்த குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.10 17:21:04 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**SC.No.119/2025**
**PW4 : வரதராஜன்**
**தேதி : 10.02.2026**

**Crl.M.P.No.116/2026 என்ற மனுவில் 05.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல்துறையின் விசாரணையின் போது எந்த தரமான கண்ணாடி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் சேதமதிப்பீட்டை மொத்தமாக கூறியுள்ளேன். குறிப்பிட்டு கண்ணாடி மாற்றுவதற்கான கூலி, ரப்பர், பீடிங் ஆகியவற்றிற்கு தனித்தனியாக மதிப்பீடு கூறவில்லை. நீங்கள் கண்ணாடி வாங்கியதற்கும், ரப்பர் பீடிங் வாங்கியதற்குமான ரசீது காவல்நிலையத்தில் ஒப்படைத்தீர்களா என்றால் பணிமனையில் இருப்பு இருந்ததால் அதற்காக தனியாக ரசீது நான் காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. பேருந்தின் கண்ணாடி உடையவில்லை என்றும் நீங்கள் தவறான மதிப்பீடு காவல்நிலையத்தில் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.10 17:20:57 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.